பன்னாட்டுத் தமிழ் ஆய்வு இதழ்
E - ISSN: 3139 -1893
BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
An international open access, peer- reviewed, Online Multi – disciplinary refereed journal

# குறும்பர் இனமக்களின் வாழ்வியல் - ஓர் ஆய்வு

முனைவர் ஜெ.ராஜகுமாரி
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு நடுவம், டோக் பெருமாட்டி கல்லூரி, மதுரை.
மின்னஞ்சல்: jrajakumari85@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழகப் பழங்குடியின மக்களுள் தனித்துவமான பண்பாடு, மரபு, வாழ்வியல் நெறிகளைப் பின்பற்றி வாழும் இனமாகக் குறும்பர்கள் விளங்குகின்றனர். நீலகிரி மலைப்பகுதிகளைத் தாயகமாகக் கொண்ட இவர்கள், இயற்கைச் சூழலோடு இணைந்த வாழ்க்கை, மூலிகை மருத்துவ அறிவு, தேன் சேகரித்தல், சிறுதானிய உணவுமுறை, இயற்கை வழிபாடு, சமூக ஒற்றுமை போன்ற பல்வேறு பண்புகளைத் தலைமுறைகள் கடந்து பேணிவருகின்றனர். இவ்வாய்வு, குறும்பர்களின் வாழ்வியல் முறைகளை பண்பாட்டியல் நோக்கில் ஆராய்கிறது. குடும்ப அமைப்பு, திருமண முறை, பொருளாதார வாழ்க்கை, சமய நம்பிக்கைகள், , கல்வி, சமூக மாற்றங்கள் போன்ற அம்சங்கள் இவ்வாய்வில் விரிவாக விளக்கப்படுகின்றன. குறும்பர்களின் பண்பாட்டு மரபுகளைப் பாதுகாக்கவும், அவர்களின் பாரம்பரிய அறிவை ஆவணப்படுத்தவும் இவ்வாய்வு உதவுகிறது.

**திறவுச் சொற்கள்**

குறும்பர், பழங்குடியினர், வாழ்வியல், பண்பாட்டியல், நீலகிரி, குடும்ப அமைப்பு, மரபு அறிவு, சமூக மாற்றம், இயற்கை வழிபாடு

## முன்னுரை

தமிழகத்தில் வாழும் பழங்குடியின மக்களின் வாழ்வியல் மரபுகள் தமிழ்ச் சமூக வரலாற்றின் முக்கியமான கூறுகளாகும். இவற்றுள் குறும்பர் இன மக்கள் தனித்துவமான பண்பாட்டு அடையாளத்தைக் கொண்டவர்களாக விளங்குகின்றனர். இவர்கள் பெரும்பாலும் நீலகிரி மாவட்டம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள மலைப்பகுதிகளில் வாழ்கின்றனர்.குறும்பர்களின் வாழ்க்கை முறை இயற்கையை மையமாகக் கொண்டதாகும். காடுகளைச் சார்ந்த வாழ்க்கை, பாரம்பரியம்,எளிமையான வாழ்வியல் ஆகியவை இவர்களின் அடையாளங்களாக விளங்குகின்றன. உலகமயமாக்கல் மற்றும் நவீனயமாக்கலின் காரணமாக பழங்குடியின மக்களின் பாரம்பரிய வாழ்க்கை முறை மாற்றமடைந்து வரும் நிலையில், குறும்பர் இன மக்களின் வாழ்வியல் முறைகளை ஆய்வு செய்வது இன்றியமையாததாகும்.இவ்வாய்வு குறும்பர் இன மக்களின் குடும்ப அமைப்பு, திருமண முறை, தொழில், உணவுமுறை, சமய நம்பிக்கைகள், மருத்துவ அறிவு, பண்பாடு மற்றும் நவீன மாற்றங்களின் தாக்கம் ஆகியவற்றை விரிவாக ஆராய்கிறது.

## பழங்குடியினர்

பழங்குடிகள் பெரும்பாலும் காடும் காடுசார்ந்த நிலங்களிலும் வாழ்கின்றனர். இவர்கள் பணம் சார்ந்த பொருளாதாரத்தை அதிகமாகப் பயன்படுத்துவதில்லை. இவர்கள் தங்களுக்கென தனி மொழியும், குடும்ப மற்றும் சமூகப்பழக்க வழக்கங்களையும் கொண்டவர்கள்.தமிழ்நாடு மற்றும் இந்தியா முழுவதிலும் இருளர், தோடர்,

குறும்பர், கோண்டுகள் போன்ற பல பழங்குடி இனங்கள் வாழ்கின்றனர்.

**வரையறை**

"பொதுவாக பெயரையும், ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் தன்மையும், ஒரே மொழியைப் பேசும் இயல்பையும், திருமணம், செய்யும் தொழில் அல்லது பணியில் சில விலக்குகளைக் கொண்டு விளங்கும் தன்மையும் உடையவராய், ஒருவருக்கொருவர் கட்டுப்பாடுடனும், பொருள்களைப் பறிமாறிக் கொண்டும் வாழும் பல குடும்பங்களின் தொகுப்பே பழங்குடியாகும்"(பண்பாட்டு மானிடவியல், ப.299) என்பதை அறியமுடிகிறது. மேலும், பழங்குடியினர்“தொன்றுதொட்டு வருகின்ற குடியின்கட் பிறந்தார்“(முதுவர் இனப் பழங்குடிகள், ப. 37), தலைவர்களின் வழிகாட்டுதலைப் பின்பற்றி எளிய முறையில் தமக்கென உள்ள கூட்டு வாழ்க்கை முறையைக் கடைப்பிடிக்கின்றனர். இவர்களுள் குறும்பர் இன மக்களின் வாழ்வியல் முறைகள் பற்றி விரிவாகக் காண்போம்.

**குறும்பர்**

குறும்பர் இன மக்களின் பண்பும்,பழக்க வழக்கமும் வியப்பிற்குரியது. மண்ணையும் விண்ணையும் நம்பி இயற்கையோடு ஒன்றி வாழ்ந்து வரும் இக்குறும்பர் மக்களின் பழக்க வழக்கங்கள் தொடக்க கால நாகரிக வரலாற்றை புலப்படுத்துகின்றன. “குறும்பர்கள் நீலகிரி மாவட்டத்திலும்,மைசூர் மாநிலத்திலுள்ள குடகு மாவட்டத்திலும், கேரளாவில் வயநாட்டிலும், தருமபுரி மாவட்டத்தில் உள்ள மஞ்சு மலையிலும் பரவலாக காணப்படுகின்றனர்.” (பழங்குடி மாணவர்களுக்கான தமிழ் மொழி பாடநூல் மதிப்பீடு, ப.8,) என்று முனைவர் கா. காமராஜ் கூறுகிறார். இவர்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முன்னோடிகளாகக் கருதப்படுகின்றனர். அவர்களைப் பற்றி நன்கு தெரிந்து கொள்ள வேண்டுமெனில் இவ் ஆய்வுக் கட்டுரை அவசியமானதாகும்.


குறும்பர்கள் ஓர் அறிமுகம் 31

நான்கு பிரிவுகளே உள்ளன. இதனைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள படம்-9ல் காணலாம்.



படம் - 9

மேற்கூறிய பிரிவினர்களில் முள்ளுக்குறும்பர், பெட்டக்குறும்பர், தேனுக்குறும்பர் ஆகிய மூன்று பிரிவினர்களும் நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் பகுதியில் வாழ்கின்றனர். பாலுக்குறும்பர்களைப் பற்றிய செய்திகள் தெளிவாக இல்லை. எனினும் இவர்கள் கோத்தகிரிப் பகுதியில் வாழ்வதாகத் தெரிகிறது.

தர்ஸ்டன் (Thurston, 1975:156) 1891-ம் வருட மக்கள் தொகை கணக்கெடுப்பு அறிக்கையை ஆதாரங்காட்டிக் கூறும் கருத்துக்கள் பின்வருமாறு:

> குறும்பா அல்லது குறுபா என்பவர்கள் முற்கால குறும்பர்கள் அல்லது பல்லவர்களின் தற்கால பிரதிநிதிகள்: அவர்கள் முற்காலத்தில் தென்னிந்தியா முழுவதும் வலிமையோடு காணப்பட்டார்கள்: ஆனால் அவர்களின் .பெருமையில் மிகச்சிறிய பகுதியே எஞ்சியிருக்கிறது: ஏழாவது நூற்றாண்டில் பல்லவ மன்னர்களின் வலிமை உச்ச கட்டத்தில் இருந்தது:


90 குறும்பர்களின் உறவுமுறை

நிலைகளாகப் பிரிக்கலாம். இதனைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள படத்தில் காணலாம்.



தற்போது ஏற்பட்டுள்ள மாற்றத்தால் இவர்களின் சமூக அமைப்பில் ஒரு பெரும் பிளவு ஏற்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. அதாவது தற்கால நாகரீகம் அல்லது புதுமையாக்கத்தை விரும்புகிறவர்கள் குல அமைப்பை சற்று புறக்கணிக்க முற்படுவது முன்னால் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு குல அமைப்பை புறக்கணிப்பவர்களின் சமுதாயத்தில் பழங்குடியினர், குடும்பம், தனி மனிதன் என்ற மூன்று நிலைகளே காணப்படுகின்றன. இதனைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள படத்தில் காணலாம்.

**குறும்பர்களின் உருவ அமைப்பு**

மலை மற்றும் காடுகளில் வாழ்ந்த மக்களைக் குறிக்கும் பெயராக "குறும்பர்" வழங்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. காலப்போக்கில் இவர்கள் பல உட்பிரிவுகளாகப் பிரிந்து வாழ்ந்துள்ளனர். அவர்களுள் பெட்ட குறும்பர், ஜேனு குறும்பர், முள்ளு குறும்பர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் பெயரால் மட்டுமே வேறுபட்டவர்கள். மொழியாலும் பழக்க வழக்கத்தாலும் ஒரே இனமாகத் தான் கருதப்படுகின்றனர். இவர்கள் கருமை நிறமுடன், உயரமாக,பரந்த முகமும், குட்டையான மூக்கும் உடையவர்கள். சிலர் அகன்ற மூக்கு உடையவர்களாகவும் காணப்படுகின்றனர். மலைப்பகுதிகளில் தொடர்ந்து உழைப்பதால் தசை வலிமை நன்றாக வளர்ந்திருக்கும்.பெண்கள் நீண்ட தலைமுடியை வளர்ப்பதும், விழாக்காலங்களில் மலர்கள் மற்றும் பாரம்பரிய அணிகலன்களால் அலங்கரிப்பதும் வழக்கமாக உள்ளது.ஆண்கள் நான்கு பக்கமும் சிதைத்து விட்டு தலை நடுவில் உள்ள முடியை இடது புறத்தில் முடிச்சு போட்டுக் கொள்கிறார்கள்.

**குறும்பர்கள் குடியிருப்புப்பகுதி**

இவர்களின் குடியிருப்புகள் பொதுவாக அடர்ந்த காடுகள், மலைச்சரிவுகள் மற்றும் நீராதாரங்களுக்கு அருகில் குடிசைகளைக் கொண்ட தொகுதிகளாக அமைந்துள்ளன. மூங்கில், மரக்கிளைகள், புல், ஓலை, மண் போன்ற இயற்கைப் பொருட்களைக் கொண்டு வீடுகள் கட்டப்படுகின்றன. "இவர்களது குடியிருப்புகள் மொட்டை அல்லது கொம்பை என்று அழைக்கப்படுகின்றன. "(பழங்குடி மாணவர்களுக்கான தமிழ் மொழி பாடநூல் மதிப்பீடு, ப.10). பெரும்பாலும் தழைகளால் வையப்பட்ட மண் வீடுகளாக உள்ளன. அவையும் சரியாக வெள்ளை அடிக்கப்படாதவையாகவும், கரியைக் கொண்டு வரையப்பட்ட சித்திரங்களால் அலங்கரிக்கப்பட்டவையாகவும் காணப்படுகின்றன. குடிசைகளில் கோரைப்புல்லால் வேய்ந்து மூங்கிலால் கட்டி அதன் மீது மண்ணைப் பூசுகின்றனர்.தரையைச் சாணத்தால் மெழுகிக் கொள்கின்றனர்.

**ஆடைகளும் அணிகலன்களும்**

நாகரீகத்தின் விளைவாக மற்றவர்களைப் போன்று ஆடை அணிய ஆரம்பித்து விட்டனர். ஆண்களைக் காட்டிலும் பெண்கள் நவநாகரீக ஆடை அணிவதில் மிகுந்த விருப்பம் உள்ளவர்களாக உள்ளனர். "ஆண்களும் பெண்களும் 'பூத்குளி' எனும் போர்வையை அணிகின்றனர். இப்போர்வை சித்திர வேலைபாடு அமைந்தவை யாகும்."( தமிழ்நாட்டுப் பழங்குடி மக்கள் வாழ்வும் வரலாறும், ப. 9). ஆண்கள் முழங்காலுக்கு மேல் வேட்டி அணிந்து உடலை மறைத்துக் கொள்கின்றனர் இடுப்பில் கருப்பு துணியை பட்டையாகக் கட்டிக் கொள்கின்றனர்.சிறுவர்கள் ஆடையின்றி காட்டில் அலைகின்றனர். பெண்களில் சிலர் வேட்டியைக் கட்டி மார்பகத்தை மூடி கொள்கிறார்கள். பெண்கள் காதில் காது ஒட்டியையும், மூக்கில் மூக்குத்தியையும்,கையில் பித்தளைக் காப்பும் அணிகின்றனர். ஆண்கள் கையில் காப்பு மற்றும் வளையல் போன்றவற்றையும் அணிகின்றனர். காதை பெரிய துளை செய்து ஓலை அணிகின்றனர்.சில பெண்கள் காது ஓலையில் குண்டுமணியைப் பதித்துள்ளனர்.

**திருமணம்**

திருமணச் சடங்கானது ஏறத்தாழ ஐந்து நாட்கள் வரை தொடர்ந்து நடைபெறும்.திருமணத்திற்கு வந்த அனைவருக்கும் வெற்றிலைப் பாக்கு கொடுக்கப்படுகின்றன. திருமண நேரத்தில் தான் தாலிக்கு முக்கியத்துவம் அளிக்கின்றனர்.தாலி அணிதல் என்பது கட்டாயம் அல்ல. பெண்கள் மற்ற இன ஆண்களுடன் தொடர்பு கொண்டால் இனத்திலிருந்து விலக்கிவிடுவர். மணவிலக்கு செய்து கொண்டவர்கள் மறுமணம் செய்து கொள்ளலாம்.அவர்களுக்கு பிறந்த குழந்தை யாரிடம் வளர வேண்டும் என்பதை பஞ்சாயத்தார் முடிவு செய்வார். திருமணத்தன்று மிகவும் நெருங்கிய உறவினர்களுக்கு மட்டும் இறைச்சி உணவு அளிப்பார். "இவர்களது திருமணச் செலவில் பெரும் பகுதி விருந்தினரை

உபசரிப்பதற்கே செலவிடப்படுகிறது. “(குறும்பர்களின் உறவு முறை, ப.56). எல்லா திருமணத்திலும் பந்தல், பந்தல்கால் நடுதல்,தாம்பூலம் மாற்றுதல் முறை உள்ளது.தெய்வங்களுக்கு ஆடு கோழி முதலியவற்றை பலியிடவும் செய்வர்.

**நம்பிக்கை**

குறும்பர் இன மக்களின் சமய நம்பிக்கைகள் இயற்கையை மையமாகக் கொண்டவை. நெருப்பை மூட்டி அதையே தெய்வமாகப் போற்றுகின்றனர். குறும்பர்கள் முன்னோர் வழிபாட்டிற்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கின்றனர். குடும்பத்தில் இறந்த முன்னோர்களின் ஆன்மா தங்களைக் காக்கும் என்ற நம்பிக்கை நிலவுகிறது. “பூசாரிகள் இறந்தவரின் ஆவியுடன் பேசும் சக்தி படைத்தவர்கள் என நம்புகின்றனர். இறந்தவர்களின் ஆவி வயதானவர்களின் கனவில் வரும் என்றும் அந்த ஆவியை திருப்திப்படுத்த படையல்கள் நடத்த வேண்டும் என்றும் கூறுகின்றனர்.“(தமிழ்நாட்டுப் பழங்குடி மக்கள் வாழ்வும் வரலாறும், ப.68). இறந்தவர்களை புதைப்பதற்கு முன் தேங்காய் முடியில் அரிசி, தேங்காய் எண்ணெய்,மஞ்சள் முதலிவற்றையும் ;ஒரு துணியில் காசையும் கட்டிப் பிணத்துடன் வைத்து புதைப்பார்கள். பாம்பு கடிக்கு கூட மந்திரம் ஓதுகின்றனர். அவர்களது குடிசைக்கு வெளியே நெருப்பு எப்பொழுதும் எரிந்து கொண்டே இருக்கும்.

குழந்தைகளுக்கு பெயர் வைக்கும் பொழுது மொத்தம் 16 பெயர்கள் தான் வைப்பார்கள்.ஒரு பெயரே பலரின் பெயராக இருக்கும். இந்த 16 பெயர்களைத் தவிர வேறு பெயர்கள் வைத்தால் குழந்தை பருவத்திலேயே அக்குழந்தைகள் இறந்து விடுவதாக நம்புகின்றனர். “ஆண்களுக்கு மாண்பன், மாறன், சடையன், சோமன், பொம்மன், காளன், கதன், மாதன் என்ற எட்டுப் பெயர்களும் பெண்களுக்கு பொம்மி, கதி, காளி, மாதி, மாண்பி, மாரி, சடையச்சி, சீர்த்தி என்ற எட்டுப் பெயர்களும் வைக்கப்பட்டுள்ளன.”(தமிழ்நாட்டுப் பழங்குடி மக்கள் வாழ்வும் வரலாறும், ப.73) இவர்களது பெயர்கள் அனைத்தும் தமிழ் பெயராக அமைந்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

**முடிவுரை**

குறும்பர் இன மக்கள் தமிழகத்தின் தொன்மையான பழங்குடியின சமூகங்களில் குறிப்பிடத்தக்க இடத்தை வகிக்கின்றனர். நவீனமயமாக்கலின் தாக்கத்தால் பல மாற்றங்கள் ஏற்பட்டாலும், தங்களது பாரம்பரிய அடையாளத்தைப் பாதுகாக்கும் முயற்சியை குறும்பர் சமூகத்தினர் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். இவர்களின் மரபு அறிவு மற்றும் பண்பாட்டை ஆவணப்படுத்தி, அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்வது கல்வியாளர்கள், ஆய்வாளர்கள் மற்றும் அரசின் முக்கியப் பொறுப்பாகும்.குறும்பர் இன மக்களின் வாழ்வியல், ஒரு பழங்குடியின சமூகத்தின் வாழ்க்கையைப் புரிந்துகொள்வதற்கு மட்டுமல்லாமல், இயற்கையோடு இணைந்து வாழும் நிலைத்த வாழ்க்கை முறைக்கான சிறந்த எடுத்துக்காட்டாகவும் அமைகிறது.

**துணைநூற் பட்டியல்**


1. இராபர்ட் சத்திய சோசப், முனைவர் தா., குறும்பர்களின் உறவு முறை, மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர், 2001.
2. காமராஜ், முனைவர் கா., பழங்குடி மாணவர்களுக்கான தமிழ் மொழி பாடநூல் மதிப்பீடு, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2014.
3. சக்திவேல், டாக்டர் சு., தமிழ்நாட்டுப் பழங்குடி மக்கள் வாழ்வும் வரலாறும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை,1980.
4. பக்தவத்சல பாரதி, சி. பண்பாட்டு மானிடவியல், அடையாளம் பதிப்பகம், திருச்சி, 1990
5. ராஜேந்திரன், முனைவர் சு., முதுவர் இனப் பழங்குடிகள், சேகர் பதிப்பகம், சென்னை, 2008